**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.</u>**

**<u>O.S.No.166/2021</u>**

**<u>நாள்.04.02.2026</u>**

**<u>வா.சா. 2</u> - ராஜமணி**

**<u>1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசார ணை</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சாட்சி சொல்ல வந்ததா என்றால் இல்லை. வாதி கணபதியம்மாள் வகையறா அழைத்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்தின் சர்வே எண், விஸ்தீரண அளவுகள் என்ன என்றால் சர்வே எண் தெரியாது, 40 செண்டிற்கு மேலாக இருக்கும். மேற்படி 40 செண்ட் வாதி எந்த வருடம் கிரையம் வாங்கினார் என்றால் தெரியாது. மேற்படி 40 செண்ட்டிற்கு நான்கு பக்க எல்கை என்ன என்றால் மேற்கு தென்வடல் வீடு, கிழக்கு பாதை, தெற்கு காலிமனை, வடக்கு காலிமனை. வாதியின் கிரைய ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. வாதியின் கிரைய ஆவணத்தை பார்க்காத போது, எதன் அடிப்படையில் மேல்பக்கம் பாதை என சொன்னேன் என்றால் பாதை 40 வருடங்களாக இருக்கிறது சர்வே நம்பருக்கு தென்கடைசியில் பாதை அதனால் சொன்னேன். என் வீடு எங்கு இருக்கிறது என்றால் வழக்குச் சொத்திலிருந்து 200 மீட்டர் தள்ளி தெற்கு மற்றும் வடக்கில் உள்ளது. வழக்கில் சொல்லிய பாதையில் எனக்கு உரிமை இல்லை நான் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்திற்கு வடக்கில் விஜயா, ஆறுமுகச்சாமி, முருகேசன் வீடு கட்டி எவ்வளவு வருடம் இருக்கும் என்றால் 30 வருடங்களுக்கு மேலாக இருக்கும். வாதி கணபதியம்மாள் எந்த வருடம் வீடு கட்டினார் என்றால் 5 வருடங்கள் இருக்கும் சாட்சி தற்போது போன வருடம் தான் வீடு கட்டினார் வீடு கட்டி ஒரு வருடம் தான் இருக்கும் என சாட்சியம் அளிக்கிறார். வாதி கணபதியம்மாள் வீடு கட்டியதற்கு கிரகப்பிரவேசம் பெரிய அளவில் வைத்தார் என்றால் சரிதான். வாதி கணபதியம்மாள் வீடு கட்டியதற்கு கிரகப்பிரவேசம் நடத்தியபோது நான் சென்றேன் என்றால் ஆமாம். வாதி கணபதியம்மாள் வீடு கட்டியதற்கு கிரகப்பிரவேசம் நடத்தியபோது வாதி வீட்டிற்கு தென்புறம் வழியாக சென்றேன் என்றால் நான் கிழமேல் தென்வடல் தெரு வழியாக போனேன்.

விஜயா வகையறாவிற்கும் எனக்கும் பிரச்சனை உண்டா என்றால் பிரச்சனை கிடையாது. என் தம்பி பெயர் ரவிச்சந்திரன் என்றால் சரிதான். என் தம்பி மகள் பிரபாவதியை, 2 வது பிரதிவாதி காதல் திருமணம் செய்துகொண்டார் என்றால் சரிதான். என் தம்பி மகள் பிரபாவதியை, 2 வது பிரதிவாதி காதல் திருமணம் செய்துகொண்டதற்கு எங்கள் குடும்பத்தில் உடன்பாடு கிடையாது என்றால் எனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. என் தம்பி மகள் பிரபாவதியும், 2 வது பிரதிவாதியும் விவாகரத்து பெற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். 2010 முதல் 2016 வரை மேலரதவீதியில் பிரதிவாதிக்குப் பாத்தியப்பட்ட கடையில் நான் ஜெராக்ஸ் கடை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். மேற்படி கடைக்கு நான் வாடகை பாக்கி வைத்ததால் என்னை கடையை காலி செய்ய சொல்லி நான் கடையை காலிசெய்தேன் என்றால் என் மகள் தான் கடையை பார்த்து வந்தார் அவருக்கு திருமணம் ஆனதால் நான் கடையை காலிசெய்தேன். மேற்படி கடைக்கு இன்னும் நான் 8 மாத வாடகை பாக்கி வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் குடும்பத்திற்கும் எனக்கும் பிரச்சனை உண்டு அதனால் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல வாதி என்னிடம் நடந்ததை சொல்லும்படி சொன்னார் அதனால் சொல்ல வந்தேன். நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் வாதிகளின் வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>

<u>மறுவிசாரணை இல்லை.</u>

<u>4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சாட்சி சொல்ல வந்ததா என்றால் இல்லை. வாதி என்ன வழக்குப் போட்டுள்ளார் என்றால் பாதை பிரச்சனை சம்பந்தமாக வழக்குப் போட்டுள்ளார்.

பாதை பிரச்சனை உள்ள சொத்தினுடைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதி வீட்டுக்கு அருகில் எனக்கு குடியிருப்பு வீடு உண்டா என்றால் ஆமாம் கடைசி வீடு என்னுடையது. என் வீட்டின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.301. வாதி வழக்குப் போட்டுள்ள சர்வே எண்.297/2 இடமும், என் வீட்டின் சர்வே எண்.301 உள்ள இடமும் வேறு வேறு என்றால் சரிதான். வாதி வழக்குப் போட்டுள்ள சர்வே எண்.297/2 இடம் புஞ்சை என்றால் சரிதான். வாதி வழக்குப் போட்டுள்ள சர்வே எண்.297/2 இடம் புஞ்சையாக இருந்து நத்தமாக மாறும்போது தான் வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே பாதை தொடர்பாக பிரச்சனை வந்தது என்றால் எனக்கு தெரிய 40 வருடம் பாதையாக தான் இருந்தது, 4, 5 வருடத்திற்குள்ளாக இடையில் மறித்துக் கட்டிவிட்டார்கள். வாதி வீடு உள்ள சர்வே எண்.297/2 வரைபடத்தை எடுத்துப் பார்த்தேனா என்றால் பார்த்தது இல்லை. சர்வே எண்.297/2 நத்தமாக மாறும்போது சர்வே எண்.297/2A முதல் சர்வே எண்.297/2L3 வீட்டு மனைகளாக மாறியது சர்வே எண்.297/2J வருவாய்த்துறை வரைபடத்தில் புல வரைடத்தில் தெரு என குறிப்பிடப்படவில்லை அதனால் 4 முதல் 7 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்றால் வேறு வழியே கிடையாது அது தான் பாதையாக ஆரம்பத்தில் இருந்து உள்ளது. நான் வாதிகளுக்கு வேண்டியவர் என்பதால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சி சொல்கிறேன் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**</u>

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.02.04 18:35:01 +0530